14.09.2021 S.C.138/2017 P.W.2 – கௌஸ் பாஷா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடரப்பட்டது.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான், எனது புகாரை ஆம்பூர் காவல் நிலையத்தில் கொடுத்தேன். என் மருமகன் இறந்து போன பிறகுதான் கொடுத்தேன். ஆம்பூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். 15.06.2015 மற்றும் 16.06.2015 அன்று 1வது எதிரி அயற்பணியில் சென்றதாக போலிசார் எனக்கு தெரிவித்தார்களா என்றால் வெளியே சென்றிருப்பதாக சொன்னார்கள். என் மருமகனை 15.6.2015, 16.6.2015 ஆகிய தினங்களில் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். 17.06.2015 அன்று மதியம் 3.00 மணி வரை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் தான் இருந்தார். அதன்பிறகு 1ம் எதிரி பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்தார். எனது மருமகன், ஒரு பெண்ணுடன் ஈரோடில் இருந்ததாக கூறிதான் அதுசம்மந்தமாக விசாரிக்க காவல் நிலையத்திற்கு கூட்டி சென்றார்கள் என்றால் சரிதான். அதுசம்மநதமாக ஒரு ஆட்கொணர்வு மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்ததால், அதுப்பற்றி விசாரிக்கவேண்டிய நிலையில் காவல் நிலையத்தார் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது மருமகன் ஒரு பெண்ணை ஈரோடிற்கு கூட்டி சென்றது சம்மந்தமாக விசாரணை நடத்தினார்கள் என்றால் சரியல்ல. அந்த பெண் தான், என் மருமகன் இருக்கும் ஈரோடிற்கு சென்றார். விசாரணை செய்ததாக சொல்லப்படும் நாட்களான 15.06.2015, 16.06.2015 மற்றும் 17.06.2015 நாட்களில் அந்த பெண் பவித்ரா பள்ளிகொண்டாவிலோ, ஆம்பூரிலோ அல்லது அவரது கணவர் வீட்டிலோ இல்லை என்றால் சரிதான். அந்த

சூழ்நிலையில் எனது மருமகனை விசாரிப்பதற்கு காவல் துறையினருக்கு ஒரு கடமை இருந்தது என்றால் சரிதான். என் மருமகனை பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து எழுதி கொடுத்து கூட்டி வந்தேன் என்றால் சரிதான். என் மருமகனை மதியம் 3.30 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து கூட்டிச் சென்றேன். நான் ஒரு மணிக்கே காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்து என் மருமகனை கூட்டிவந்துவிட்டேன் என்றாலும், ஆனால் பொய்யாக 3.30 மணிக்கு கூட்டி வந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு மணிக்கு எழுதிக்கொடுத்தேன். ஆனால் செல்போன், பர்ஸ் ஆகியவை காணவில்லை என்று சொல்லி அவரை கூட்டி செல்வதற்கு 3.30 மணி ஆகிவிட்டது. நான் 3.30 மணிக்கு தான் என் மருமகனை கூட்டி சென்றதாக காவல் துறையினர் செய்த விசாரணையில் சொல்லி உள்ளேன். 27.06.2015 அன்று என்னை விசாரித்த கோவிந்தசாமி என்ற ஆய்வாளரிடம் நான் சொல்லி உள்ளேன். பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கும், ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கும் இடையே 25 கி.மீ. நான் எனது மருமகனை ஆம்பூர் அரசு மருத்துவமனையில் மாலை 4.30 மணிக்கு மருத்துவமனையில் அனுமதித்தேன். 27.06.2015 அன்று மதியம் ஒரு மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை இறந்து போன ஷமில் பாஷா என்னுடைய கட்டுப்பாட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். மதியம் நான் சாப்பிடவே இல்லை. மருமகனுக்கு சாப்பாடு வாங்கி கொடுக்கவில்லை. ஜீஸ் வாங்கி கொடுத்தேன். இடைப்பட்ட காலத்தில் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தோம். நான் பஸ்சில் சென்றதாக கூறுவது சம்மந்தமாக பஸ்சில் பிரயாணம் செய்த டிக்கெட்டை கொடுத்தேனா என்றால் இல்லை. நான், என்னுடன் வந்து முரளியுடன், எனது மருமகனை இரண்டு சக்கர வாகனத்தில் அனுப்பவில்லை. நான், எனது மருமகனை, முரளியுடன் இரண்டு சக்கர வாகனத்தில் முன்னால் அனுப்பிவிட்டு, பின்னால் நான் சென்றேன் என்றாலும், ஆனால் இந்த

நீதிமன்றத்தில் அவ்வாறு இல்லை என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே பஸ்சில் பிரயாணம் செய்திருந்தால் அதற்கான டிக்கெட்டை போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றாலும், கட்டுக்கதையாக நான் பஸ்சில் பிரயாணம் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், என் மருமகனை, ஆம்பூரில் உள்ள ஒரு அரவை மில்லில் வைத்து அடித்தேன் என்றால் சரியல்ல. அடிக்கவில்லை. அதனால் தான் ஒரு மணிக்கே காவல் நிலையத்தில் இருந்து கூட்டி சென்ற என் மருமகனை, 4.30 மணிக்கு நான் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. அங்கு ஒ.பி. டிக்கெட்டை யார் வாங்கினார்கள் என்றால் இர்பான் என்பவர் வாங்கினார். நான் ஷமில் பாஷாவுடன் கூட இருந்தேன். இர்பான் என்பவர் முஸ்லிம் அமைப்பில் பொறுப்பாக இருப்பவர் என்றால் சரிதான். பவித்ரா என்பவர் இந்து மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். நானும் முஸ்லிம் அமைப்பில் நல்ல பொறுப்பான பதவியில் உள்ளேன் என்றால் சரிதான். எனவே மதம்மாறி இந்த மாதிரி ஒரு செயலை என் மருமகன் செய்துவிட்டதாக கூறி நாங்கள் அனைவரும் சேர்ந்து அவரை அடித்தோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்றபோது மருத்துவர் இல்லை. மருத்துவர் மாலை 6லிருந்து 7 மணிக்குள் வந்தார். கிட்டத்தட்ட 7 மணியிருக்கும். மருத்துவர், என் மருமகனை பரிசோதனை செய்தபோது நானும் உடனிருந்தேன் என்றால் சரிதான். மருத்துவர் தனது பணியை முறையாக செய்தார் என்றால் சரிதான். எனது மருமகனின் உடல் முழுவதும் சோதனை செய்து, என்ன என்ன காயங்கள் உள்ளது என்பதை குறித்துக்கொண்டார் என்றால் சரிதான். அதன்பிறகு நான், என் மருமகனுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுக்கவில்லை. மதியம் ஒரு மணிக்கும் சாப்பாடு கொடுக்கவில்லை, அதற்கு பிறகு 7 மணி வரையிலும் நான், அவருக்கு, அவர் மீது இருந்த கோபத்தால் நான்

சாப்பாடு வாங்கி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வந்திருந்தார்கள். நான் 7 மணிக்கு மருத்துவமனையில் சேர்த்தபிறகு நான் எங்கிருந்தேன் என்றால் நான் ஆட்டோ ஓட்ட சென்றுவிட்டேன். அப்போது என் மருமகனுடன், எனது மகள் மற்றும், என் மருமகனின் தாயார் ஆகியோர் உடனிருந்தார்கள். ஆண்கள் வார்டில் பொதுவாக பெண்களை இரவு நேரங்களில் இருக்க அனுமதிப்பதில்லை என்றாலும், ஆனால் என் மகளும், என் மருமகனின் தாயாரும், என் மருமகனுடன் ஆண்கள் வார்டில் இருந்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆம்பூரில் தான் உள்ளேன் என்றாலும், ஆம்பூரில் தான் ஆட்டோ ஓட்டி வருகிறேன் என்றாலும், அங்குள்ள முஸ்லிம் அமைப்பில் நான் பொறுப்பில் உள்ளேன் என்றாலும், அதனால் எனக்கு அனைவரது அறிமுகமும் உள்ளது என்றாலும் சரிதான். 7 மணிக்கு பிறகு, என் மருமகனுடன் நாங்கள் யாருமே இருக்கவில்லை என்றாலும், அவர் மட்டும் தான் மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் எல்லோருக்கும் என்னை தெரியும் என்றால் சரிதான். அன்று இரவு 9 மணிக்கு என் மருமகனை ஆட்டோவில் வைத்து மருத்துவமனையை விட்டு வெளியே கூட்டிச்சென்றேன் என்றால் சரியல்ல. அவரை வெளியே கூட்டிசென்று என் மருமகனை அடித்தேன் என்று சொன்னால் சரியல்ல. அவர் மருத்துவமனையில் இருந்து தலைமறைவாகிவிட்டார் என்று ஒரு செய்தி நிலவியது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதனால் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த என் மருமகனை மருத்துவரின் அனுமதியோ அல்லது அங்குள்ள பணியாளரின் அனுமதியோ பெறாமல் வெளியே கூட்டிச்சென்றேன் என்றால் சரியல்ல. மறுநாள் காலையில் என்னுடைய மகள், மருமகனுக்கு உணவு கொடுத்தார். ஆட்டோவில் ஸ்கூலுக்கு ஓட்டிசென்றுவிட்டு நான்

மருத்துவமனைக்கு போனபோது எனக்கு அதுப்பற்றி தெரியும். என் மருமகனுக்கு காலை 9 மணிக்கு சாப்பாடு கொடுக்கப்பட்டது. நான் சொல்வது போல் மறுநாள் காலை 9 மணிக்கு என் மருமகனை நானோ, என் மகளோ உணவு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், முந்தைய நாள் 9 மணிக்கு என் மருமகனை வெளியே கூட்டி சென்றபிறகு திரும்புவம் என் மருமகனை மருத்துவமனையில் கொண்டு வந்து விடவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மருமகன் மருத்துவமனையில் இருப்பது போல் அடையாளம் காட்டிவிட்டு அவரை வெளியே கூட்டிசென்று அடித்து துன்புறுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருக்கும் நபர்களுக்கு, மருத்துவமனையிலேயே சாப்பாடு கொடுப்பார்கள் என்றால் சரிதான். அந்த சாப்பாடை என் மருமகன் வாங்கினாரா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் மருத்துவமனைக்கு சென்றபோது தெரிந்துக்கொண்டேன். நான் ஸ்கூலுக்கு ஆட்டோ ஓட்டிவிட்டு, பின்னர் நான் மருத்துவமனைக்கு காலை சென்றபோது என் மருமகனுக்கு காலை உணவு கொடுத்தது பற்றி தெரிந்துக்கொண்டேன். அப்போது என் மருமகன் மருத்துவமனையில் இருந்தார். காலையில் மருத்துவர் ரௌண்ட்ஸ் வரும்போது என் மருமகன் இருந்தார். ஆனால் நான் இல்லை. என் மருமகன் இருந்தது பற்றி போன் மூலமாக கேட்டு தெரிந்துக் கொண்டேன். என் மருமகனின் தாயாரிடம் கேட்டு தெரிந்துக் கொண்டேன். 19.06.2015 இரவு 9 மணி முதல் மறுநாள் 20.06.2015 மாலை 4.30 மணி வரை என் மருமகன் மருத்துவமனையிலேயே இல்லை என்றாலும், நானும், என் மருமகனை கொண்டுவிடவில்லை என்றாலும் சரியல்ல. 20.06.2015 அன்று மதியம் 3 மணியளவில் நான், என் மருமகனை மருத்துவமனையில் வைத்து பார்த்தேன்.

19.06.2015 இரவு 9 மணி முதல் மறுநாள் 20.06.2015 மாலை 4.30 மணி வரை என் மருமகனை மருத்துவமனைக்கு வெளியே வைத்து அடித்து துன்புறுத்தினேன் என்றாலும், பின்னர் 4.30 மணிக்கு மருத்துவமனையில் கொண்டு வந்து விட்டுவிட்டு நான் வெளியே சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. 20.06.2015ம் தேதி ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரை நான் காலை 11 மணிக்கே பார்த்தேன். அவரை நான் ஏன் பார்க்க காவல் நிலையம் சென்றேன் என்றால் 1ம் எதிரி என் மருமகனை அடித்து, துன்புறுத்தியது பற்றி புகார் கொடுக்க சென்றேன். ஆனால் புகார் கொடுக்கவில்லை. புகார் கொடுக்க சென்றாலும், ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆய்வாளரே ஜமில் பாஷாவை தேடிக்கொண்டிருப்பதாக சொன்னதால், அவரை கூட்டிக்கொண்டு வந்து, மருத்துவமனையில் என் மருமகனை காண்பித்துவிட்டு, பின்னர் நான் புகார் கொடுத்தேன். 20.06.2015ம் தேதி மாலை நான் ஒரு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் ஆய்வாளர், என் மருமகனை தேடிக்கொண்டிருப்பதாக சொன்னபோது, ஏன் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் என்று நான் கேட்கவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.